திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதியிலுள்ள கட்பலூரில் இருக்கின்ற கோழிப்பண்ணை நீண்ட நாட்களாக நட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்த காரணத்தாலே தான் இப்படிக் கேள்வி கேட்கப்பட்டது. இப்பொழுது இலாபத்தில் இயங்கியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள், மெத்த மகிழ்ச்சி. இந்தக் குஞ்சு பொறிக்கும் நிலையத்தை இந்தப் பண்ணையை மேலும் விரிவாக்குவதற்காக அரசு ஏதாவது ஏற்பாடு செய்ய இருக்கிறதா? இந்த நிலையத்திலிருந்து கோழி இறைச்சி மலிவான விலையில் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது: அது இப்பொழுது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதுவும் மீண்டும் துவக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குஞ்சு பொறிக்கும் வீரியத்தை விரிவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளது. அடுத்து, இந்த இறைச்சியைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசுக்குத் தெரிந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோழி இறைச்சி விற்பனை என்பது நீண்ட நாட்களாக செய்யப்பட்டு வந்தது; ஆனால் இப்பொழுது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குஞ்சு பொறிக்கும் நிலையத்தைப் பொறுத்தவரையிலும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த விவரத்தை சொல்ல முடியுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப்பற்றி என்னிடம் இப்பொழுது விவரம் இல்லை. விவரம் தெரிந்தவுடன் நான் கூறுகிறேன்.

*சின்னசேலத்தில் கட்டப்பட்டுவரும் பால் குளிரூட்டும் நிலையம்

குறுகிய கால வினா எண். 16—திரு எஸ். சிவராமன்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்ன சேலத்தில் கட்டப்பட்டு வரும் பால் குளிரூட்டும் நிலையம் எப்பொழுது துவங்கப்படும்?

ஆ) திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி;

(அ) சின்ன சேலத்தில் தற்பொழுது கட்டப்பட்டுவரும் பால் குளிரூட்டும் நிலையத்தில் கட்டுமானப் பணிகளும் இயந்திரங்கள் நிறுவுதலும் முடிவடைந்து, சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. இக்குளிரூட்டும் நிலையம் விரைவில் முழு அளவில் இயங்க ஆரம்பிக்கும்.

1981 மே 12]

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 10 இலட்சமாகும். இதில் கட்டுமானப் பணி ரூ. 5 இலட்சம். இயந்திரங்கள் ரூ. 5 இலட்சம்.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பால் குளிரூட்டும் நிலையம் விரைவில் இயங்கப்படும் என்று சொன்னார்கள், மிக்க நன்றி. ஆனால், அங்கே பால் குளிரூட்டும் நிலையத்தினுடைய கொள்ளளவு, 30,000 லிட்டர் பால் வாங்குவதாக திட்டம் இருக்கிறது. ஆனால், தற்சமயம் 15,000 லிட்டர்தான் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் ஆத்தூர் பகுதியிலிருந்து 9,000 லிட்டர் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆத்தூரிலே ஒரு பால் குளிரூட்டும் நிலையம் கட்டுவதாக எண்ணம் இருக்கிறது. அதைக் கட்டுவதனால் அங்கேயிருந்து வருகிற 9,000 லிட்டர் பால் நின்றுவிடும். ஆகவே அதைப் போக்குவதற்கு அந்தப் பகுதியிலே உள்ள விவசாய பெருமக்கள் கறவை மாடுகள் வாங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் அதே சின்னசேலம் பகுதியிலேயிருக்கிற விவசாயிகளுக்கு நன்மை தருகிற வகையில், அதிக அளவுக்குச் சின்னசேலம் குளிரூட்டும் நிலையம் துவக்கிய உடன் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்க இருக்கிறோம். அதன் காரணமாக அந்தப்பகுதியில் மட்டும் ஏறத்தாழ 15,000 விவசாயிகளை உள்ளடக்கிய கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி, அவர்களிடமிருந்து பாலைப் பெற்று அந்த நிறுவனம் இயங்கும்.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே நேரத்தில் அங்கே பணியாற்றக்கூடிய கால் நடை டாக்டர்களும் இன்ஜினீயர்களும் இருக்கிறார்கள். இப்பொழுது கட்டக்கூடிய நிலையமானது சின்னசேலத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்திலே இருப்பதால், அதிலே பணியாற்றக்கூடிய அதிகாரிகளுக்கு அந்தப்பால் குளிரூட்டும் நிலையத்தின் அருகில் வீடு கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய உணர்வுகளைக் கருத்திலே கொண்டு பரிசீலனை செய்யப்படும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத்தலைவர் அவர்களே, பால் குளிரூட்டும் நிலையங்களின் மூலம் சேகரிக்கப்படும் பாலானது மின்தடை ஏற்படக்கூடிய காலங்களில் எல்லாம் கெட்டு விடுகின்றது. அதனால், சின்னசேலம், ஆத்தூர் போன்ற பகுதிகளிலிருந்து சேலத்திற்கு வரவேண்டிய பாலில் ஒரு நாளைக்கு 2,000, 3,000 லிட்டர்கள் கெட்டு விடுகின்றது. ஆகையால், இம்மாதிரி மின் தடைகள் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு ஜெனரேட்டர்களை வைக்கக்கூடிய உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகள் கவனத்தில் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா எண்கள் 17 ம், 18-ம் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

சந்தனமர ஏற்றுமதிக்கான தடை.

* குறுகிய கால வினா எண் 17.—திரு. ப. நெடுமாறன் : மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து சந்தனக்கட்டை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு விதித்திருந்த தடை அகற்றப்பட்டு விட்டதா ?

(ஆ) இது சம்பந்தமாக மத்திய அரசிடம் இருந்து வந்த பதில் என்ன ?

* குறுகிய கால வினா எண். 18 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சந்தனமர ஏற்றுமதியை மத்திய அரசு தடுத்துள்ளதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன ?

(இ) தமிழக அரசு எடுத்துள்ள முயற்சி என்ன?

(ஈ) அதன் பலன் என்ன?

[குறுகிய கால வினா எண்கள் 17, 18 ஆகிய இரண்டிற்குமான விடை]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :—

(அ) ஆம்.

(ஆ) 1-4-80 முதல் மத்திய அரசு சந்தனமர ஏற்றுமதியை முழுமையாக தடை செய்துள்ளது.

)இ) தமிழக அரசு மத்திய அரசிடம் சந்தனமர ஏற்றுமதிக்கான தடையை முழுமையாக நீக்கும்படி கடித மூலமும், தந்தி மூலமும், நேரிலும் கேட்கப்பட்டது.

(ஈ) சந்தனமர ஏற்றுமதிக்கான தடையை நீக்க வேண்டியதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இந்தியப் பிரதமர் அவர்கள் முதல்வருக்கு அறிவித்துள்ளார்கள்.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயிருந்து சந்தனக் கட்டை ஏற்றுமதி தடை செய்யப்பட்டு விட்டது. அந்தத் தடையை நீக்க வேண்டு

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS